தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — திருக்குறள்

தொகுதி V. } துன்மதி௵ புரட்டாசி௴ } பகுதி 6.

ஒலி நூல்.

Sound·

ஸ்ரீமான், K. P. யஜ்ஞேசுவர சர்மா, M.A., L.T. எழுதியது

மூன்றாவது அத்தியாயம்.

அலைகள்.

குளத்தில் ஒரு கல்லைப்போட்டால் கல் விழுந்த இடத்தி லிருந்து அதைச்சுற்றி வட்டமான அலைகள் பரவுவதைக் காண்கிறோம். கல் விழுவதனால் ஜலத்தில் உண்டாகும் கலக்கம் கரையை நோக்கி நாலா பக்கங்களில் பரவுகிறது. அப்படிப் பரவும்பொழுது குளத்தில் மிதக்கும் இலைகள், துரும்புகள் முதலியவை மேல் கீழாய் அசைகின்றனவே யொழிய கரையை நோக்கிச் செல்வதில்லை. இதிலிருந்து அக்கலக்கத்தினால் பாதிக்கப்பட்ட நீர்த்துளிகள் கரையை நோக்கி ஓடவில்லை யென்றும் அலை ரூபமே முன்னேறுகிறதென்றும் விளங்குகிறது. காற்றடிக்கும்போது வயலில் நெற்பயிரில்

அலையோடுவதைப் பார்க்கலாம். பயிர் முனைகள் தம் இருப்பிடங்களை விட்டுப் பெயர்ந்தோடுகின்றனவா? அலையுருவம் மட்டுமே காற்று மூலமாக முன்னேறிச் செல்லுகிறது. ஒரு நீண்டு கனத்த கயிற்றின் ஒரு முனையை ஓரிடத்தில் கட்டி மறுமுனையைக் கையில் இழுத்துப் பிடித்துக்கொண்டு கையை மேல் கீழாய்ச் சுண்டினால் கயிற்றில் அலையோடும். ஒரு ரூல்தடியின்மேல் ஓர் இரும்புக் கம்பியைச் சுருள்கள் ஒன்றோடொன்று தொட்டுக் கொண்டிருக்கும்படி சுற்றித் தடியை உருவிவிட்டால் ஒரு ஸ்பைரல் (Spiral) உண்டாகும். அதன் ஒரு முனையை ஓரிடத்தில் கட்டி மறுமுனையை இலேசாய் இழுத்துக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு கத்தியால் முதல் மூன்று நான்கு சுருள்களை நீட்டுமுகமாய்த் தேய்த்தால் அதனால் உண்டாகும் சுருள் நெருக்கமும் (Compression of coil) அதன் பிறகுண்டாகும் சுருள்விலாசமும் (Rare-faction) ஸ்பைரலில் பரவும்.

இவ்வலைகளைச் சற்று கவனித்தால் ஒரு விசேஷம் புலப்படுகிறது. மேற்சொன்ன கயிற்றில் அலையோடும் போது கயிற்றின் பாகங்கள் கயிற்றின் நீட்டுப் போக்குக்கும், அலைமுகத்துக்கும் குறுக்காக அசைகின்றன. இப்படிப்பட்ட அலைகளுக்குக் குறுக்கலைகள் (Transverse waves) என்று பெயர். ஆனால் ஸ்பைரலில் அலையோடும்போது அதன் பாகங்கள் அலைமுகமாகவே, அதாவது ஸ்பைரலின் நீட்டுப்போக்கிலேயே சலிக்கின்றன. இவ்வலைகளுக்கு நெடுக்கலைகள் (Longitudinal waves) என்று பெயர். நீர் நிலைகளில் உண்டாகும் அலைகள் குறுக்கலைகள். ஏனெனில் நீர்த்துளிகள் அலையோடும் திசை (Direction)க்குக் குறுக்கே தத்தம் இருப்பிடத்தைச் சுற்றி சிறுவட்டமிடுவதினாலேயே இவ்வலைகள் உண்டாகின்றன.

கூடின், திரவபதார்த்தங்களில் குறுக்கலைகளும் நெடுக் கலைகளும் இரண்டும் வியாபிக்கக்கூடும். ஆனால் வாயுபதார்த் தங்களில் நெடுக்கலைகள் தான் வியாபிக்குமென்று அப்பதார்த் தங்களின் சுபாவ குணங்களிலிருந்து ஊகிக்கப்படுகிறது.

2. ஒரு சிறு ஈயக்குண்டை ஒரு மெல்லிய நூலின் நுனி யில் கட்டித்தொங்க விடுவோம். குண்டின் மைய (Centre) த்திலிருந்து நூலின் மறுமுனைவரையுள்ள நீளம் 39 இஞ்சு இருக்கவேண்டும். குண்டைக் கையால் இழுத்து வலது பக்கத்தில் கு என்ற ஸ்தானம் (Position) வரையில்



படம் 1.

கொண்டுவந்து விட்டுவிடுவோம். விட்டால் அது கு என்றதன் முதல் ஸ்தானத்திலிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறபடியால் பூமியின் ஆகர்ஷணம் (Gravity) காரணமாக நடுவிலுள்ள கு என்ற ஸ்தானத்துக்குச் செல்லத் தலைப்படுகிறது. அவ்விடத் தை அடைந்ததும் நிற்காமல், தன் சலனவேகத்தில் அகற் கப்பால் செல்லுகிறது. அப்போது மேல்நோக்கிச் செல்லுவ தால் பூமியின் ஆகர்ஷணம் காரணமாக அதன்வேகம் கொஞ் சம்கொஞ்சமாகக் குறைகிறது. கு'' என்ற ஸ்தானத்துக்கு

ஸ்தானத்துக்கு வந்ததும் அதன்வேகம் அற்றுப்போகிறது. நடுவிலிருக்கிற கு விலிருந்து மற்ற இரண்டு குக்களும் ஒரே சமமான தூரத்தில்தான் இருக்கின்றன. இப்பொழுது இடது கு நடுக் கு வைக் காட்டிலும் உயரமானதால் குண்டு கு வை நோக்கிப்புறப்படும். புறப்பட்டு நடுக் கு வில் வந்து நிற்காமல் வலது து வுக்குப் போகும். அங்கிருந்து மறுபடியும் ஆட ஆரம்பிக்கும். ஒரு கடியாரத்தை வைத்து பத்துப்பத்து ஆட்டங்களுக்கு என்னநேரம் பிடிக்கிறது என்று பார்த்தால் ஒவ்வொரு ஆட்டமும் சமகாலிகம் (Isochronous) என்றும் 1 மினிட்டில் 60 அர்த்த கம்பனம் (Half-ocilliation) செய்யுமென்றும் அறியலாம்.

அக்குண்டை நிறுத்திவிட்டு, அதன் முதலிடத்தைச் சுற்றி வட்டமிடும்படியாக அதை ஆட்டி, அவ்வட்டத்தில் பத்துத்தடவை சுற்ற எவ்வளவு நேரமாகிறது என்று பார்ப்

134



படம் 2.

போம். 20 செகண்டில் பத்துத் தடவை சுற்றுகிறது. இப்பொழுது அவ்வட்டத்தின் மட்டத்தில் கண்ணை வைத்துக்கொண்டு கொஞ்சதூரத்தில் நின்று குண்டைக் கவனித்தால் அது ஒரு நேர் கோட்டில் முன்னும் பின்னுமாக ஆடுவது போல் தோன்றும். 3-வது படத்தில் அவ்வட்டத்தைப் பதினாறு சமபாகங்களாகப் பிரித்திருக்கிறது. குண்டு நடுக் கு விலிருந்து இடது கு வுக்கு வரும் போது நேர்கோட்

டில் 1-லிருந்து 2க்கு வருவதுபோலும் வட்டத்தில் 2லிருந்து 3-க்கு வரும்போது நேர்கோட்டில் 2 லிருந்து 3க்கு வருவது போலும் முறையே தோன்றும். வட்டத்தைச் சமபாகங்களாகப் பிரித்திருப்பதால் முழுவட்டமிட 1 செகண்டு பிடிக்குமென்று வைத்துக்கொண்டால் ஒவ்வொரு பாகத்தையும் கடந்து செல்ல $\frac{1}{16}$ செகண்டு ஆகும். அதாவது நேர்கோட்டில் 1-2, 2-3, 3-4 முதலிய தூரங்கள் ஒவ்வொன்றையும்



படம் 3.

கடந்து செல்லக் குண்டுக்குச் சமநேரங்கள் பிடிக்கும். ஆனால் அத்தூரங்கள் மையத்தை அணுக அணுகப் பெரியவையாவதால் குண்டு மையத்தை நோக்கிச் செல்லும்போது வேகமதிகரிக்கிறதென்று நன்கு விளங்குகிறது.

இப்படி இக்குண்டு நேர் கோட்டில் ஆடுவதாகத் தோன்றுவதுபோலவே ஒரு குண்டு வாஸ்தவத்தில் நேர் கோட்டில் ஆடுமானால் அதன் சலனம் சாதாரண ஹார்மானிக சலனம் (Simple Harmonic Motion) என்று சொல்லப்படும். நேர்கோட்டில் 1 லிருந்து 9-வரையிலுள்ள தூரம் அச்சலனத்தின் வீச்சு (Amplitude) என்றும் 1 இலிருந்து 9-க்குப் போய் மறுபடியும் 1 க்கு வருவதற்குப் பிடிக்கும் நேரம் கம்பனகாலம் (Period) என்றும் சொல்லப்படும். ஒரு சாதாரணப் பெண்டுலம் ஆடுவதை அதன்கீழிருந்து நோக்கினால் அதன் சலனம் சாதாரண ஹார்மானிக சலனமென்பது புலப்படும்.

(தொடரும்)

தில்லைக்கோவிந்தன்.

Thillai Govindan.

பதினாலாவது அதிகாரம்.

உலக வாழ்க்கையில் நான் முன்னேற்றம் அடைந்து ஊர் மெய்ச்ச ஒழுகுவதைக் கூறுவது.

பிறந்தநாட்டின் அமைதியையும் நன்மையையும் காக்கும் மேலான கண்காணியாய் ஸர்க்கார் உத்தியோகம் என்னும் ஆட்டத்தை இவ்வாறு நான் ஆடித் தோற்றபின் அடுத்தாற்போல் எந்த வேலையில் தலையிடலாமென்று சுற்றிநோக்கிக் கொண்டிருக்கும்பொழுது, என் தகப்பனார் மரணாவஸ்தையிலிருக்கும் செய்தி கிட்டி, உடனே ஊருக்குப் போக நேர்ந்தது. கொஞ்ச காலமாக அவருடம்பு அசௌக்கியமாயிருப்பினும், இவ்வளவு சீக்கிரம் அவர் போய்விடுவாரென்று நான் எண்ணவேயில்லை. அவர் மீது எனக்குள்ள மனமார்ந்த ஆழ்ந்த வாஞ்சையின் பெருமையை அவரை இழந்தபின்பே நான் முழுதும் உணர்ந்தேன் ; ஒரு குடும்பத்தைப் பராமரிப்பது எவ்வளவு கடினமென்பதையும் அப்பொழுது தான் நான் அறிந்தேன். என் அருமைத்தாயின் அலங்கோலத்தையும், கூந்தலைக் களைந்துவிட்டு அவள் முக்காடிட்டுடுத்திய வெள்ளாடையையும் கண்கொண்டு பார்க்க என்மனம் சகிக்கவில்லை; கணவன் முன்போகாத கைம்பெண்ணானேனே என்று அவள் வருந்தியபொழுது, அப்படி அவள் போயிருந்தால்

நலமாயிருக்குமென்று நானுமே அவளுடன் வருந்தினேன் குடும்பத்துக்கு இப்பொழுது நானே யஜமானன்; அன்புக்கு உரிய ஸ்திரீகள் நால்வர் என் கை பார்த்து நிற்க, நானேவீட்டுக்குப் பெரிய ஆண்பிள்ளையாகிய விட்டேன். பரீக்ஷையில் ஜெயித்துப் பட்டமும் பெற்றிருந்தென்ன? பனையோலை ஏடுகளில் எழுதிக் கட்டிக்கிடந்த குடும்பக்கணக்குக்கள் ஒன்றும் எனக்குச் சற்றும் விளங்கவில்லை; என் சொத்தாகி விட்ட வயல்களில் ஒன்றையுமே நான் நேரில் கண்டறியேன். ஆகையால் படிப்பறியாப் பண்ணையாரெனினும் உலகியலறிந்த புத்திசாலியான என் மைத்துனன் உதவியை வேண்டினேன்; அவன் வந்து என் சொத்துக்களைக் கணக்கிட்டுத் தந்தான். அதுவரை, அப்போதைக்கப்போது என் தகப்பனர் எனக்கு அனுப்பிவந்த பணம் எங்கிருந்து வந்தது என்கிற கவலையே எனக்குக் கிடையாது. என் மட்டிலும், அந்த ரூபாய்கள் எங்கள் வயற்காடுதோப்புத் துறவைகளினின்று வெட்டியெடுக்கப் பட்டிருக்கலாம். இப்பொழுதோ என் சொத்து முழுதும் பதினாயிரம் ரூபாய்க்கு மேலில்லை யென்றும், அதில் ரூபாய் ஆறாயிரம் வரை இரண்டு புள்ளிகளுக்குக் கடன் கொடுபட வேண்டுமென்றும் துலங்கிற்று. பரம்பரையான பூர்வீக. சொத்தில் எதையுமே விற்கக்கூடாது என்றாள் நாணிப்பாட்டி; என் தாயார் மனதும் அப்படியே யிருந்ததால், அவள் மனத்தைப் புண்ணாக்கி, தன் காதற் கணவனை இழந்ததைப் பற்றி நினைந்து, மேன்மேலும் அவள் வருத்தமுறும்படிச் செய்ய என் மனம் ஒப்பவில்லை. ஆகவே, மேற்கொண்டு ஆயிரரூபாய் கடன் வாங்கி, அவ்விரண்டு கடன்காரருக்கும் என் சொத்து முழுதையும் ரூபாய் ஏழாயிரத்திற்கும் அடைமானம் வைத்து, அசல் தொகையை நான் என்று திருப்பிக் கொடுக்கிறேனே அன்று என் சொத்தைத் திரும்பி என்

கைவசம் ஒப்புவிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தேன். பிறகு, குடும்ப சகிதமாய்த் தில்லையை விட்டுப் புறப்பட்டு, பிழைக்கும் வழி தேடி, பழைய பதவியை மீட்போமென்று எங்கள் ஜில்லாவின் முக்கிய பட்டணத்தை யடைந்தேன்.

நானோ நாஸ்திகன், தெய்வம் என்று ஒன்று இருப்பதை அறியேன் என்று பெருமை பேசுபவன்; அக்கொள்கையின் படி என் தகப்பனாரின் உத்தரகிரியை யொட்டிய வைதிகச் சடங்குகள் ஒன்றையும் செய்யக் கூடாதவன் எனினும், துக்கத்தில் மூழ்கிய என் தாயாரைத் திருப்தி செய்யவும், (இதை மறைப்பானேன்) ஊர்வாய்க்குப் பயந்தும், அவற்றை யெல்லாம் செய்யச் சம்மதித்தேன். அதே காரணமாக, மாஸிக ஆப்திக சிராத்தங்களும் முறையே நடைபெற்றன.

வேலூருக்கு வந்து குடித்தனம்போட்டதும், பசிப்பிணியைப் போக்கவேண்டிய தீரா அவசியத்தால் தூண்டப்பட்டு, ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும், மீண்டும் என் சட்டப் புஸ்தகங்களை நன்கு படித்து, பரீக்ஷையில் ஒப்பேறி, உள்ளூர் நியாயஸ்தலங்களில் வக்கீலாய்ப் பேசும் உரிமையை எளிதில் சம்பாதித்தேன். உலக ஞானமும் இதற்குள் அநேகமாய் எனக்குப் பிடிபட்டது; அதை அநுசரித்து நடந்துகொள்ளவும், பொய்பித்தலாட்டம் மோசடி இவைகளைக்கண்டு தயிக்காமல் சம்மாளித்துக்கொள்ளவும் படிப்படியாகப் பழகிவிட்டேன். நான் இருந்த வீட்டைவிட்டுமாறி, விசாலமான பங்களா ஒன்றை அமர்த்திக்கொண்டேன்; மிடுக்கான குமஸ்தா ஒருவனைத் திட்டம் செய்தேன். பெட்டிவண்டியென்ன, வேலைக்காரன் என்ன, கைப்பெட்டி நிரம்பப் பெருத்த கேஸ்கட்டுகள்தான் குறைவு, மற்றப்படி பட்டணத்தில் பெரிய வக்கீலுடைய சகல ஆடம்பரங்களையும் மேற்கொண்டேன். என கைபபெட்டியும் இடமின்றி நிறைந்து

கனத்திருந்ததில் குறைவில்லை; ஆனால் உள்ளிருந்தவை, தூசி படிந்த கேஸ்கட்டுகளல்ல; என்னிஷ்ட கவிகளின் புஸ்தகங்கள் சிலவும், சுயேச்சை அபிப்பிராயத்தைப்பற்றிய துண்டுப் பத்திரிகைகளுமே. இந்த டம்பமெல்லாம்கூடி என் ஆயிர ரூபாய்ப்பையைச் சுருக்கிவிட்டதெனினும் உலக இயற்கையை அறிந்து தைரியமாய்க் காத்திருந்தேன். கக்ஷிக்காரர் ஒருவர் பின்னொருவராய் என் பங்களாவிற்குள் நுழைய ஆரம்பித்தனர். பொய்க் கேஸுகளை நான் ஏற்றுக் கொள்வதில்லை, பொய்ச் சாக்ஷியும் தயாரிப்பதில் உள்ளிருந்து உதவிபுரிவதில்லை என்றறிந்து பலர் மனம் வருந்தித் திரும்பிவிட்டார் எனினும், வரவர என் பெயர் பொது ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டு, பொய் புரட்டு மலிந்த இவ்வுலகில் யோக்யதைக்கு எளிதில் கிடைக்கிற கௌரவத்துடனும் மரியாதையுடனும் என்னிடம் நியாயாதிபதிகள் நடந்து கொண்டார்கள். "இங்கிலீஷ்" படிப்பும் இப்போது பயன்பட்டது. அதைக்கொண்டு, சாதுரியமாய்ப் பேசி, என் எதிரிகளைக் கேலிசெய்து வாய்திறக்க வொட்டாமல் பண்ண முடிந்தது.

சில வருஷங்களுக்குள், படிப்படியாய் உயர்ந்து மேலான ஸ்திதியை அடைந்தேன்; பூர்விக் சொத்தை மீட்டுக்கொண்டேன். நாகரிக பதவிகளை அடைந்து ஊர்ப்பெரிய மனுஷருள் ஒருவனானேன்; தாலூகா போர்ட்டிலும் ஜில்லா போர்ட்டிலும் நியமனம் பெற்றதுமன்றி, ஜில்லாவில் அதிகம் பணம் படைத்த கருமங்களைப் பரிபாலித்து மேற்பார்க்கும் சங்கத்திலும் ஆயுள் பரியந்தம் இருக்கும்படியான நியமனம் பெற்றேன். இச்சபைகளிலேதான் உள்ளூர் சுய ஆட்சி என்பது எவ்வளவு மோசம், என்ன வீண் கேலி என்பதை நான் முதல் முதல் கண்டுகொண்டேன். நன்றாய் எழுதப்படிக்கத் தெரியாதவரும், ஆங்கிலம் என்று ஒரு பாஷை யிருப்பதே

கேட்டறியாதவரும் பலர் என் கூட அச்சபை அங்கத்தின ராயிருந்தனர். பணம் படைத்திருந்ததால் அவர்கள் நிய மிக்கப்பட்டார்கள். ஏதோ தமக்கு வேண்டியவனை ஒப்பந் தக்காரன் எவனாவது அதிகம் செலவு செய்ததாகக் கணக்கு அனுப்பியபோதுமட்டும் அவர்கள் கமிஷனின் அவன் செய்த வேலைக்கு அவ்வளவு கொடுப்பது சரியே என்று ஆமோ திப்பதாக இரகசியமாய் ஒப்புக்கொண்ட போதன்றி, மற்றவேலைகளில் சபையின் கூட்டத்திற்கு வந்துபோவதற்கு ஏற்பட்ட வழிச்செலவு தொகைகளைப்பெறுவதில் தான் கவ னமாயிருந்தார்களேதவிர, சபையில் என்னபேசித் தீர்மானிக் கப்படுகிறது என்ற விசாரமே அவர்களுக்கு இல்லை. அக்கி ராசனாதிபதியின் சம்ஞைகளை அனுசரித்துக் கைகளைத் தூக்கி ஆமோதிப்பது தலை அசைத்து மறுப்பது அன்றி புதியதோர் ஜலதாரைகட்டவோ, தம் தலைவன் தலையை வெட்டவோ எதற்கு மனமொப்பி உத்திரவளிக்கிறோமென் பதையும் அறியாமல் அக்கிராசனாதிபதியைத் தாங்கிநின்றார் கள். ஆகவே, சபைத்தலைவரான சர்க்கார் உத்தியோகஸ்தர், அப்படி உத்தியோகமுறையில்லாமல் படிப்பாளிகளாய் மட்டு முள்ள இரண்டொரு அங்கத்தினரிடம் சற்றும் மரியாதை வைக்காமல், அவர்களை அசட்டைசெய்து, தம்மபிப்பிராயங் களுடன் முரண்பட அவர்கள் ஏதேனும் பேசத் தைரியம் கொண்டாலும், அவர்கள் சொல்லுக்குச் செவிகொடாமல், ஆத்திரப்படுவர்.

இப்படி ஸர்க்கார் கமிஷ்சபையில் பலப்படுவதோடு, அவர் மனது வைத்தால் மட்டுமே மறுபடி நியமனமாகு மென்பதை அறிந்த எழுத்தறியாத மூட அங்கத்தினரும் கூடவே அவர் பேச்சே சபையில் எப்போதும் நிலைத்து நின்றது. அந்த

விடப் பொதுவாய் அதிகம் சுயசக்தி வாய்ந்தவர்; ஜில்லாவின் ஸ்திரமான தன்மைகளுக்கு விரோதமாக அவர் நடப்பது அபூர்வம் என்பது தான் ஒருவாறான தேறுதல் தந்தது.

எப்படியிருப்பினும், வாஸ்தவத்தில் இதையும் சுயஆட்சி என்றுரைப்பது சற்றேனும் பொருந்துமோ? நகரபரிபாலன சபைகள் இவ்வளவு மோசமில்லை; என்றாலும், அங்கும், காலக் கிரமத்தில் அக்கிராசனத்திற்கு ஒருவரைத் தெரிந்தெடுக்க வேண்டிய வேளைகளில் உண்டாகும் விவாதங்களின் பலனாக, சில்லரைச் சச்சரவுகளும் கக்ஷிப்பிரதிகக்ஷிகளும் பிரமாதமாய் விளையும். ஆனால் இவ்வித ஏற்பாட்டின் குற்றம் குறைகள் யாவற்றையும் விளங்கக் காட்டுவன, கோவில் முதலிய தர்ம சொத்துக்களைப்பரிசீலனை புரியும் கம்மிட்டிகளே. இந்தத் தரு மங்களுக்கு ஏற்பட்டசொத்துகள்கொஞ்சமல்ல, கம்மிட்டியார் கோவிலதிகாரி,தருமகர்த்தாமுதலிடவரை நியமிப்பதால், இஷ் டப்படி, வேண்டியவர்களுக்கு வேலைகள் கொடுத்துதவ,தாரா ளமாய் இடமிருந்தது. கம்மிட்டியில் பெரும்பாலரும் படிப்பறி யாத பணக்காரர்கள். பகிரங்கமாக, நியமன அதிகாரத்தை அதிகம் பொருள் கொடுப்போருக்கு விற்பதும், தங்களுடைய சொந்த ஆட்களுக்கு அதிகாரங்கள் கொடுத்து அவர்கள் கோவிற் சொத்தைக் கொள்ளை யடிப்பதற்கு உள்ளாளாக விருந்து, அவர்களுடன் பங்கு போட்டுக்கொள்ளுவதும் சகஜ மாயிற்று: உ-தாரணமாக, நான் கமிட்டியி லிருந்தபோது நடந்ததோர் சம்பவத்தை இங்கு எடுத்து எழுதுகிறேன். கம்மிட்டியில் ஒருவர் இறக்கவே, அவர் வகித்த ஸ்தானத் திற்கு ஊரில் அதிகம் செல்வாக்கும் பணமும்படைத்த இரு வர் போட்டிபோட்டு நின்றனர். அவர்களுள் ஒருவர், ஜில்லா விற்கே பெரிதாய் அதிகப் பணம் வருமானமுடைய கோவிற்கள் ஒன்றின் தர்மகர்த்தாவா யிருந்தார்; என்

ரூழும், அதிலும் அதிக வருமானத்திற்கு இடம் கொடு ப்பதான இந்தக்கம்மிட்டியில் ஒரு பதவிகிடைத்தால் தமக் குள்ள வேலையை வேண்டாமென்று விட்டு விடத் தயாராக விருந்தார். ஆனல் போட்டியாக நின்ற மற்றவர் வெகு சமர் த்தன். எதிராளியுடன் மெதுவாகக் கைகலந்து தமக்குப் போட்டியாக நிற்காமல் விலகிவிட வென்று ஆயிரரூபாய் கைக்கூலி பேசிச் சரிப்படுத்தி விட்டார். தடங்கல் இப்படி நிவர்த்தியாகவே, அவர் ஒழுங்காய்க் கம்மிட்டி ஸ்தானத்தை அடைந்தார். தம் அதிகாரமும் செல்வாக்கும் அதிகரிக்கும் வரை சில மாதங்கள் காத்திருந்து, பிறகு ஒருநாள், தமது பழைய எதிரியான தர்மகர்த்தா மேற்பார்த்து வரும் கோ விலுக்கு, ஸ்வாமி தரிசனம் பண்ணி வரவேண்டு மென்று புறப்பட்டுப் போனர். அங்கேபோய்ச் சேர்ந்ததும், திடீ ரென்த் தமக்குரிய கடமைகளைக் கைப்பிடித்து நிறை வேற்ற வேண்டுமென்ற உணர்ச்சி உண்டாகி அவரை உபத்திரவிக்கவே, கோவில் தருமசொத்து எல்லாம் துர் விநியோகப்படுத்தப்படவில்லை என்று தர்மே பார்த்து திருப்தி செய்து கொள்ள வேண்டிக் கணக்குக்களைக் கொண்டு வரச்சொன்னர். தருமகர்த்தா என்ன செய்வது என்று திகைத்து நின்று, பிறகு கோவில் சொத்தை துஷ்பிரயோஜனம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தண் டனை அடைவதினின்றும் தம்மைத் தப்புவித்துக்கொள்ளும் பொருட்டு, தாம் முன்பு கறந்து வாங்கிய ரூபாய் ஆயிரத்தை யும் ஒரு வட்டி வீதம் வட்டியும் சேர்த்து உடனே திரும்பக் கொடுத்து விட்டார். இந்தக் கம்மிட்டிகளில் உத்தியோ கத்தை ஒரு ஆஸ்தியாகக்கருதினவர்கள் பலர் எனக்கு விரோதிகளாகிவிடவே, படிப்பைப் பரவச்செய்வதிலும் மற்றப் பொதுஜன கஷ்டநிஷ்டூரங்களை நிவர்த்திப்பதிலும் உபயோகிக்கத்தக்க தருமசொத்துக்களை வெட்கம்மானமின்றி ஓயாமல் ஒழுங்காய்ச் சூறையிட்டு வீணாக்குவதைக் கண்டும் விரலைக்கூட அசைக்க முடியாமல் அங்கு இருந்து பாபம் சம்பாதித்துக் கேடுறுவதைப் பார்க்கிலும் அவர்களுடைய

சேர்க்கையையே விட்டுத் தொலைப்பது மேலெனக் கருதி, கம்பிட்டி வேலையை விட்டு விலகினேன். இந்தக் கம்பிட்டிகளில் நான் வேலை பார்த்த கொஞ்சகாலத்திலே, கோவில்களைப்போய்க் காணவேண்டும் என்று கம்பிட்டியார் மனம் வைத்தபோது, அங்கே எனக்குத்தான் முதல் ஸேவை, எனக்குத்தான் முதல் மரியாதை என்று சண்டை போடுவதும், அந்தக் கோவில்களைச் சேர்ந்த தேவடியாட்களின் மனத்தை திருப்திசெய்து களிப்பிப்பதில் ஒருவருக்கு ஒருவர் போட்டி போடுவதுமாயிருப்பதை அறிந்தேன்.

நான் கலாசாலையில் படித்த நாட்களில், இமயமலைவாசி போல ஒருவரோடும் கலக்காமல் தனித்து நின்றது போய், இப்படி உலகுடன் தாராளமாய்க் கலந்து பழக நேரிட்டவே, அதன் விலக்கமுடியாத பலனாக நானறியாமலே என்புத்தியின் ஆவேசமும் தரும சிந்தையும் தளர்ந்து விட்டன. வாஸ்தவத்தில் சகவாச யோக்கியனல்லாத சுத்தக் காட்டுப்பிராண்டிபோல் ஒருவன் தோன்றினாலும் பாதகமில்லாமல்; பிறருடன் கலகலப்பாயிராமல், தனித்து அமர்ந்த அமரிக்கையுடனிருத்தலும், தன் மதிப்பு அதிகப்பட்டு வீண்கௌரவம் கொள்ளுதலுங் கூட, ஒருவனது குணசீலத்தை நன்கு பாதுகாக்கின்றன. எவனொருவன் உலக மொழியில் "கொடுக்கல் வாங்கல்" செய்கிறானோ, எல்லோரையும் திருப்தி செய்விக்க வேண்டுமென்று அவாக்கொண்டு பிறர் மனம் புண் படுமே என்று பயந்து, உள்ளதை உள்ளபடி உரைக்கத் தயங்குகிறானோ அஃதாவது, எவனொருவன் வழவழத்த வாயனாய், பிறர் பிரீதியையே கோரி, முகத்தில் சதா புன்சிரிப்புத் தாங்குபவனாய் விளைய வருகிறானோ, அவன் உலகப்பிரீதிக்கு இரையாக அதிகம் பறிகொடுக்கவேண்டும். மானம்போய், எவருடைய நன்மதிப்புக்கு விலையுண்டோ அவர் நன்மதிப்பும் போய், தனக்கோ பிறர்க்கோ உண்மையான நன்மை ஒன்றும் செய்யத் திறனற்றுப் போகிறான். ஆ! ஓர் அற்ப விஷயத்திற்காக அரும்பொருளை யன்றோ அவன் இழந்து விடுகிறான்!

(தொடரும்)

நமது நியாயஸ்தலங்கள்
Our Law Courts

(தொடர்ச்சி).

ஸ்ரீமான் N. ராஜகோபாலாசாரியார், B.A., B.L. எழுதியது.

கக்ஷிக்காரர்களுக்குள்ள நியாயங்களை விவரித்துச் சொல்லக்கூடிய சட்டப்புத்தகங்கள் துரைத்தனத்தாரால் அனேகம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகளில் கோர்ட்டுகளில் கக்ஷிகளை இன்னவிதமாகச் சொல்வது என்பதைக்காட்டக் கூடிய சட்டத்துக்கு ஸிவில் ப்ரொஸீஜர் கோடு (Civil Procedure Code) என்று பெயர். ருஜூசெய்ய வேண்டிய விஷயங்களை எவ்விதமாக ருஜூசெய்வது என்பதைக் காட்டக்கூடிய சட்டத்துக்கு எவிடென்ஸ் ஆக்ட் (Evidence Act) என்று பெயர். வியாஜ்ஜியங்களை வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்ட காலத்திலிருந்து இத்தனைகாலத்துக்குள் தான் கொண்டு வரவேண்டியது என்பதைச் சொல்லும் சட்டத்திற்கு லிமிடேஷன் ஆக்ட் (Limitation Act) என்று பெயர். இந்த சட்டங்களுக்கு உள்பட்டுத்தான் வியாஜ்ஜியங்களை நடத்தவேண்டும்.

இம்மாதிரியாகவே ஜனங்கள் செய்யும் குற்றங்களை விசாரிப்பதற்காக கிரிமினல் கோர்ட்டுகள் என்று சொல்லப்படும் நியாயஸ்தலங்கள் ஒவ்வொரு ராஜதானியில் பிரதிகிராமங்களிலும், தாலுக்காக்களிலும், ஜில்லாக்களின் முக்கியப்பட்டணங்களிலும் ராஜதானிகளின் முக்கிய பட்டணங்களிலும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. கிராமங்களில் ஏற்படுத்தப்

பட்டிருக்கும் கோர்ட்டுகளுக்கு கிராம மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு என்று பெயர். தாலூக்காக்களில் மூன்று விதமான கோர்ட்டுகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மூன்றும் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் என்று மூன்று விதம். ஜில்லாக்களில் முக்கிய பட்டணங்களில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் என்றும் செஷன் கோர்ட்டு என்றும் இருவகைக் கோர்ட்டுகள் இருக்கின்றன. இராஜதானிகளின் முக்கிய பட்டணங்களில் இருக்கும் பெரிய கோர்ட்டுக்கு ஹைகோர்ட்டு என்று பெயர். மேற் சொல்லிய கோர்ட்டுகளில் கிராம மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு அதிகாரத்தில் மிகவும் சிறியது. மற்றவை படிப் படியாகப் பெரியவை. எல்லாவற்றிற்கும்பெரிது ஹைகோர்ட்டு. இவைகளில் முதல் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு செஷன் கோர்ட்டு. ஹைகோர்ட்டு இவற்றுக்கு கீழ்கோர்ட்டுகளிலிருந்து அப்பீல்களை விசாரிக்க அதிகாரம் உண்டு. அப்பீல் இல்லாத விஷயங்களில் எல்லாக் கீழ்க்கோர்ட்டாரும் சரியாக நியாயம் நடத்துகிறார்களா என்று பார்ப்பதற்காக கேஸ் கட்டுகளைப்படித்துப்பார்த்து நடவடிக்கைகளைச்சீர் இருத்த ஹைகோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரத்திற்கு ரிவிஷன் (Revision) என்று பெயர். இவற்றில் சிறு குற்றங்களை விசாரிக்க சிறுகோர்ட்டு அதிகாரிகளையும் பெரிய குற்றங்களை விசாரிக்கப்பெரியகோர்ட்டுஅதிகாரிகளையும் குற்றங்களுக்குத் தக்கபடி சிக்ஷைகளையும் சிக்ஷைகளுக்குத் தக்கபடி அப்பீல்களையும், அப்பீல் கோர்ட்டுகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். குற்றங்களுக்காக ஹைகோர்ட்டார் விதிக்கும் சிக்ஷைகளிலிருந்து இங்கிலாந்திலிருக்கும் பிரிவி கௌன்ஸிலுக்கு (Privy-council) ஸாதாரணமாக அப்பீல்கிடையாது. குற்றங்களையும் குற்றங்களுக்காக உள்ள சிக்ஷைகளையும் சொல்லும் சட்டத்துக்கு

பீனல்கோடு (Penal Code) என்றுபெயர். குற்றங்களை விசாரிக்கும் அநேக கோர்ட்டுகளையும் அந்தந்த கோர்ட்டுகள் இன்ன இன்ன சிக்ஷை விதிக்கலாம் என்று சொல்வதும் இன்ன கோர்ட்டுகளிலிருந்து இன்ன கோர்ட்டுகளுக்கு எந்த எந்த சந்தர்ப்பத்தில் அப்பீல் செய்யலாம் என்பதையும் சொல்லும் சட்டத்துக்கு கிரிமினல் ப்ரொஸீஜர்கோட் (Criminal Procedure Code) என்று பெயர். குற்றங்களை எப்படிருஜு செய்வது என்று சொல்லும் சட்டத்துக்கு எவிடென்ஸ் ஆக்ட் (Evidence Act) என்று பெயர். மேற்சொல்லிய பீனல்கோடு என்று சொல்லும் சட்டத்தில் ஜனங்கள் செய்யும் குற்றங்களை முக்கியமாய் நாலுவகையாய் பிரித்திருக்கிறார்கள். அதாவது ஒருவன் செய்யும் குற்றம் அன்னியர்களுடைய தேகத்துக்கோ அல்லது மனதுக்கோ அல்லது மானத்துக்கோ அல்லது அவர்களுடைய பொருளுக்கோ கெடுதலை விளைவிக்கக் கூடியதாக இருக்கும். குற்றங்கள் ஒருவகை. தேகத்துக்குதுன்பத்தை கொடுக்கக் கூடிய குற்றங்கள் அடி, சாதாரண காயம், முதல் கொண்டு கொலை வரையில் உள்ளது இரண்டாவது வகை. பொருளைப்பற்றின குற்றம் சாதாரணத் திருட்டு முதல் நம்பிக்கை துரோகம் வழிப்பறிக் கொள்ளை வரையில் உள்ளது. மூன்றும் வகை இம்மதிரி குற்றங்கள் தவிர மேற் சொல்லிய பீனல் கோடில் ராஜாங்கத் தாருக்கும் பொது ஜனங்களுக்கும் ஜனங்கள் செய்யும் குற்றங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. குற்றங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிக்ஷைகள் அநேகவிதம். அதாவது சவுக்கடி, அபராதம், சாதாரணக் காவல், கடுங்காவல், தீபாந்திரத்துக்கு அனுப்புதல், கொலை முதலானது. குற்றங்களை அனேகமாய் விசாரிக்கும் விஷயத்தில் ஜில்லாக்களிலும் ராஜதானிகளின் முக்கிய பட்டணங்களிலும் இருக்கும் செஷன் கோர்ட்டார் அவர்களுக்கு

ஒத்தாசையாக அஸெஸர்களென்றும், (Assessor) ஜூரி (Jury) என்றும் சிலர்களை ராஜாங்கத்தார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் அவர்களையும் கலந்துகொண்டுதான் செஷன் கோர்ட்டாரவர்கள் தீர்ப்புச்சொல்லவேண்டும். இம்மாதிரி அஸெஸர்கள், ஜூரிகள் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டார் அவர்களுக்கு ஸாதாரணமாகக் கிடையாது. மேற்படி கிரிமினல் ப்ரொஸீஜர் கோடில் ஜனங்கள் ஏற்கனவே செய்த குற்றங்களை விசாரிப்பதுடன் குற்றங்களைச் செய்ய தயாராக இருப்பவர்களையும் வழக்கமாகக் கெட்ட நடத்தை உள்ளவர்களையும் குற்றங்கள் செய்யாமல் இருக்கும்படி நல்லநடத்தைக்கு ஜாமீன்வாங்கவும் மாஜிஸ்ட்ரேட்டார்களுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

கிரிமனல் கேஸ்களில் அநேகமாய் ஸர்க்காருடைய வக்கீல் வாதிக்காகக் கேஸைநடத்துகிறார்கள். குற்றவாளிதன்னுடைய கக்ஷியைத் தன்னுடைய வக்கீலைக்கொண்டு நடத்துகிறான்.

ரெவினியூ கோர்ட்டுகள் என்று நாம் முன் சொன்ன கோர்ட்டுகளில் டிப்டிகலெக்டர்கள் என்று பெயருடைய அதிகாரிகள்தான் அஸல் கோர்ட்டு நியாயாதிபதிகள் அவர்களுடைய தீர்ப்புக்களிலிருந்து சில விஷயங்களில் ஜில்லா கலெக்டருக்கும் சில விஷயங்களில் ஜில்லாகோர்ட்டுகளுக்கும் அப்பீல் உண்டு. ஜில்லா கோர்ட்டார்கள் செய்யும் அப்பீல் தீர்ப்புக்களிலிருந்து ஹைகோர்ட்டுக்கு அப்பீல் உண்டு. ஜில்லா கலெக்டர்கள் அப்பீல்களில் செய்யும் தீர்ப்புக்களிலிருந்து சில விஷயங்களில் ரெவினியூ போர்டு (Revenue Board) என்று ஒவ்வொரு ராஜதானியிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முக்கிய ரெவினியூ அதிகாரிகளுக்கு அப்பீல் உண்டு. மற்றவைகளில் ஜில்லா கலெக்டர்கள் செய்யும் அப்பீல் தீர்மானங்கள் நியாயத்திற்குஒத்திருக்கின்றனவா அல்லவா என்று பரிசிலனைசெய்ய ரெவினியூபோர்டாருக்கு அதிகாரம் உண்டு. மற்றெவ்விதத்திலும் ரெவினியூ கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் ஸிவில் கோர்ட்டு நடவடிக்கை மாதிரிதான்.

(தொடரும்).

ராஷ்டேல் நியாயஸ்த மார்க்கதர்சிகள் சரித்திரம்.

The History of the Rochdale Pioneers.

இங்கிலாந்துதேசத்தில் உள்ள ராஷ்டேல் என்றுபெயர் பூண்ட சிறு பட்டணத்துக் கைத்தொழிற்காரர்கள் சுயநலத்திற்காக ஒன்றுசேர்ந்து எப்படித் தங்கள் காரியங்கள்முழுவனவற்றையும் தங்கள் வசமே வைத்துக்கொண்டு வெகு சிறிய ஆரம்பங்களிலிருந்து எல்லாரும் ஆச்சரியப்படத்தக்க விருத்தியை அடைந்து வந்திருக்கிறார்களோ அம்மாதிரி வேறு ஒரு இடத்திலும் நடந்ததில்லை. சாதாரணமாக தேகப்பிரயாசையினால் வேலைசெய்து சம்பாதிக்கிற ஆட்களுக்கு தங்களிடத்திலேயாவது அல்லது பிறரிடத்திலேயாவது நம்பிக்கை இருப்பது வழக்கமில்லை. ஒரு பெரிய காரியத்தை ஏற்பாடு செய்யவாவது அல்லது அப்படி ஏற்பாடு செய்யப்பட்ட காரியத்தை நிர்வகிக்கவாவது அவர்களுக்கு திறமை உண்டென்று ஒருவரும் நினைக்கிறதில்லை. இப்படி இருக்க ராஷ்டேல் வேலைக்காரர்கள் மட்டும் ஐக்கியமடைந்து மிக ஏழைகளாயிருந்தபோதிலும் இப்போது லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வர்த்தகம்செய்து வருகிறார்கள் என்கிற விஷயம் வியக்கத்தக்கதே. ஆகையால் இவர்கள் சரித்திரத்தை நாம் கேட்டு அவர்கள் முன்னுக்குவந்தது எந்த வழிகளினாலென்று விசாரிப்போமானால், நம்மவர்களில் ஏழையாயிருப்பவர்களுக்கும் சுகமாய்ப் பிழைக்க ஒருவழி பிறக்கும் என்னும் பூர்ண நம்பிக்கையுடன் இந்தச் சரித்திரச் சுருக்கத்தை, ஹோலிஓக் என்கிற ஆங்கிலேயர் எழுதிய புஸ்தகத்திலிருந்து, நமது ராஜதானிக்கு அந்த ஹோலிஓக் போல விளங்கும் ம-ா-ா-ஸ்ரீ, டி. கே. ஹனுமந்தருபாவர்கள் ஆஞ்ஞாபனையைச் சிரமேற்கொண்டு தமிழில் மொழிபெயர்த்து இப்போது நான் உரைக்கலானேன்.

1843௵ முக்கால்வாசி கழிந்தபின், ஒரு நாள், மழையும் இருளும் மூடி, எல்லோர் மனதிலும் ஒருவித உற்சாகமின்மை ஏற்பட்டு ஜனங்கள் தங்கள் வாழ்நாளை இகழ்ந்து நொந்துகொண்டிருக்கும் தருணத்தில், பிழைக்க வேலை ஒன்றும் கிடைக்காமல் வெகுநாளாகச் சரியான ஆகாரமில்லல

மல் மெலிந்து தங்களுக்கு என் அம்மார்திரியான கதி வந்த தென்று யோசித்துக் கொண்டிருந்த சில ஏழைச் சேணியர்கள் ஒன்றாய்க் கூடி தங்கள் ஸ்திதியை விருத்தி செய்து கொள்ள என்ன செய்யவேண்டு மென்கிற விஷயத்தைப்பற்றி கலந்து பேசினார்கள். தொழிற்சாலைகள் ஏற்படுத்தி நடத்திவந்த முதலாளிகளிடம் பணம் ஏராளமாக இருந்தது; கடைக்காரர்களிடம் நிரம்பச் சரக்குகள் இருந்தன; இவ் விரண்டுமில்லாமல் இந்தச் சேணியர்கள் எப்படிக் காலக்ஷேபம் செய்வது? ஏழைகளுக்காக என்று சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட தர்ம சாலைகளுக்குப் போகிறதா? அப்படிப் போனால் வெட்கங் கெட்ட ஜீவனமாகுமே. வேறு தேசத்திற்கு ஓடிப்போய் விடலாமா? அதுவோ ஏழையாய்ப் பிறந்த குற்றத்திற்காக சுதேசத்தைவிட்டு பகிஷ்காரப்படுத்தப்படுவதற்குச் சமானமாகும். ஆனால் என்ன செய்வது? வேறு ஒருவருடைய உதவியில்லாமலே தங்கள் ஜீவனத்திற்கு ஏற்பாடு செய்துகொள்ள ஆரம்பிக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள். வியாபார விஷயங்களில் ஞானமாவது அனுபவமாவது இல்லாமலும் முதல் இல்லாமலும் வர்த்தகர்களாக வேண்டுமென்று நினைத்தார்கள். இவ் வகையான பெரிய முதலாளிகளில் பத்துப்பன்னிரண்டு பெயர்கள் சந்தா ஜாப்தா ஒன்று தயார் செய்து ஒவ்வொருவரும் வாரம் ஒன்றுக்கு இரண்டு அணா கொடுக்கிறது என்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். ஐம்பத்திரண்டு தடவை இந்த சந்தாவை வசூல் செய்து பணம் சேர்த்த போதிலும் அந்தப் பணம் ஒரு சாக்கு மாவுகூட வாங்கப்போதுமானதன்று. அப்படியிருந்தும் இந்த தீரர்கள் ஆரம்பித்துப் பதின்மூன்று வருஷங்களுக்குள் வருஷம் ஒன்றுக்குப் பதினொரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபாய் கொண்ட வருஷத்திய வியாபாரம் செய்யும்படியான ஸ்திதிக்கு வந்து விட்டார்கள்.

1843ஆம் வருஷத்தில் கம்பளித்துணிகள் வியாபாரம் வெகு பலமாய் நடந்துவந்தது. முதலாளிகளுக்குப் பெருத்த லாபம் கிடைத்தது. இந்தச் சுபசமயத்தில் இந்தக் கம்பளிகளை நெய்து கொடுத்த சேணியர்கள் தங்கள் சம்பளத்தைச் சற்று உயர்த்தும்படி தங்கள் எஜமானர்களை கேட்டுக் கொண்டார்கள். இவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வேலைவாங்கி வந்த முதலாளிகளும் வேலைக்காரர்கள் கேட்பது சரிதான் என்று அபிப்பிராயப் பட்டார்கள். ஆனால் இந்த அபிப்பிராயத்தை காரியத்தில் காட்ட ஒரு தடை இருந்தது: ஒவ்வொரு முதலாளியும் தான் முதலில் இந்த விஷயத்தில் பிர

விருத்தி செய்யமுடியாதென்றும் அடுத்த கடை முதலாளி சம்பளத்தை உயர்த்தினால் தானும் உடனே உயர்த்திவிடுவதாகவும் சொன்னான். கொஞ்சம் நாள் காத்துப் பார்த்த பின்பு வேலைக்காரர்களெல்லாம் கூடி ஒரு யோசனை செய்தார்கள். ஒவ்வொரு முதலாளியையும் அவனிடத்தில் வேலை செய்பவர்களெல்லோரும் சம்பள உயர்வுக்காக கேட்கவேண்டுமென்றும், ஏதேனும் ஒரு முதலாளி அதற்கிணங்காவிடில் அவனிடம் வேலை செய்து வரும் வேலைக்காரர்கள் வேலையை நிறுத்திவிடவேண்டுமென்றும் தங்களுக்குள் தீர்மானித்துக் கொண்டார்கள். அப்படி வேலையை நிறுத்தினவர்களின் குடும்பங்கள் பிழைக்க, வேலையிலிருப்பவர்கள் தங்கள் வரும்படிகளிலிருந்து கொடுத்து ஸம்ரக்ஷிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இந்தத் தீர்மானங்களை எப்படி நிறைவேற்றுவது? எப்படி முதலாளிகளுக்குத் தெரியப்படுத்துகிறது? கடிதம் மூலமாய் தெரியப்படுத்துவது மகா அபராதமாகும். ஆகையால் நாலுபெயர்களாய்ச் சேர்ந்து முதலாளிகளை நேரில்கண்டு பேசி முடிக்கவேண்டுவதுதான் வழி. இந்தமாதிரி நேரில் போவதிலோ ஒரு பெரிய அபாயம் இருந்தது. என்னவென்றால் இந்த மாதிரிக் கூட்டங்களில் பிரமுகனாய் எந்தவேலைக்காரன் முதலாளிகளைக்கண்டு பேசுகிறானோ அவன் கொஞ்சகாலத்தில் தன் முதலாளியால் வேலையிலிருந்து தள்ளப்படுவதோடுகூட வேறு ஒரு இடத்திலும் அவனுக்கு அதற்குப் பிறகு வேலைகிடைக்கிறதில்லை ஆகையால் இந்தச்சேணியர்களும் பயந்தார்கள். யார்போகிறது என்கிற கேள்விவந்தவுடன் அதற்குமுன் மூச்சுத்திணறப் பேசினவர்கள் வாயெல்லாம் திடீரென்று மூடிவிட்டது. இந்தக்காலத்தில் கூட ஏதேனும் ஒருவிஷயத்தைப்பற்றிப் பேச எவ்வளவோ பெயர்கள் தயாராயிருப்பார்கள். ஆனால் அந்த விஷயம் நிறைவேறக் கொஞ்சம் பணம் வேண்டுமென்று கையெழுத்துக்காக ஒரு ஜாப்தாவை நீட்டினால் எல்லாருடைய அங்கங்களும் ஒடுங்கிவிடுகின்றனவல்லவா? அம்மாதிரிதான் அப்போதும் ஆயிற்று. கடைசியில் சில தீரர்கள் புறப்பட்டு முதலாளிகளிடம் போய்ச்சந்தித்துப் பேசினார்கள். சில முதலாளிகள் சம்பளம் உயர்த்துவதாக ஒப்புக்கொண்டாலும் பெரும்பான்மையோர் இந்த வேலைக்காரப் பயல்கள் சொற்படி கேட்பதைவிட தங்கள் வியாபாரத்தை நிறுத்திவிடுவது நலம் என்று சொல்லிவிட்டார்கள். இந்தப் பதிலை வாங்கிக்கொண்டு திரும்பிவந்து அச்சேணியர்களெல்லாம் ஒரு சங்கம் ஏற்பாடு செய்து தங்களுக்குள்ளேயே குடும்பபோஷணைக்குக்கு வேண்

டிய சாமான்கள் அகப்படக்கூடிய ஒரு கடைவைத்து வியாபாரஞ்செய்வதாக நிச்சயித்தார்கள்.

இதே 1843 ஷூ௵த்தில் கரிக்கனியில் வேலைசெய்யும் சிலர் தங்கள் எஜமானர்களிடம் விண்ணப்பம்செய்துகொண்டு தங்கள் சம்பளங்களை உயர்த்திக்கொண்டார்கள். எல்லாத் தொழிற்காரர்களும் கூடியிருக்கும் ஒரு இடத்தில் கரிக்கனிக் காரர்களுக்கு அப்படிச் சம்பள உயர்வு கிடைத்திருக்கும் பொழுது ஏன் மற்ற தொழிற்காரர்களுக்கும் கிடைக்கக்கூடாதென்றும் கரிக்கனி வேலைக்காரர்கள் எந்த உபாயத்தினால் வென்றார்களோ அதே உபாயத்தை எல்லாரும் கைக்கொள்ள வேண்டுமென்றும் ஒரு யோஜனை நடந்தது. இதற்குள் கனிவேலைக்காரர்களுக்குள்ளேயே ஒருவன் தங்களுக்குச் சம்பளம் உயர்ந்ததில் தங்களுக்கு ஒன்றும் பிரயோஜனம் இல்லாததோடுகூட நஷ்டமாகக்கூட இருந்தது என்று சொன்னான். இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு எல்லோரும் இவன் சொல்வது நம்பமுடியாததாக இருக்கிறதே என்று கேட்க அவன் சொன்னதாவது: உங்களுக்கு ஒவ்வொருவருக்கும் வாரம் ஒன்றுக்கு 15 ரூபாய் சம்பளம் என்றுவைத்துக்கொள்வோம். மேலும் அது உன் குடும்பச் செலவுக்குக் கிட்டத் தட்டப்போதுமானதென்றும் நினைத்துக்கொள்வோம். வாரம் ஒன்றுக்கு 3 ரூபாய் சம்பளம் உயர்ந்து, அதேகாலத்தில் உன் சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்கள் வாரம் ஒன்றுக்கு 4 ரூபாய் அதிக விலைகொடுத்து வாங்கவேண்டுவதாயிருந்தால், நீ முன்னைவிட ஏழையாய்ப் போகிறாயல்லவா? எங்கள் கனியில் முதலாளிகள் செய்கிறது என்னவென்றால் எங்கள் சம்பளத்தை உயர்த்திக்கொடுத்துவிட்டு கரியின் விலையையும் அதே சமயத்தில் உயர்த்திவிடுகிறார்கள். ஒரு வேலைக்காரனுக்கு 2 ரூபாய் உயர்வு சம்பளம் கொடுத்தால் ஜனங்களிடமிருந்து 30 ரூபாய் வாங்கிவிடுகிறார்கள். இதைக் கேட்டவுடன் அந்தக்கூட்டத்தில் இருந்தவர்களில் அனேகர் இந்தக்கரிவேலைக்காரர்களைத் திட்டி அவர்களுடைய தூண்டுதலின்மேல்தான் கரியின் விலை கிராக்கியாய் விட்டதென்று கூச்சலிட்டார்கள். இந்த வேலைக்காரர்கள் தங்கள் முதலாளிகள் கரி விலையை உயர்த்தினபொழுது ஏன் பொது ஜனங்களுக்குச் சொல்லியிருக்கக் கூடாதென்று முறையிட்டார்கள். இதைக்கேட்டு அந்தக்கரிக்கனிக்காரன் கோபங் கொண்டு பொது ஜனங்கள் வாங்குகிற சாமான்கள் மலிவாய் அகப்படவேண்டும் என்று எண்ணுகிறவர்களை தவிர எளிய வேலைக்காரர்கள் படும் கஷ்டத்தை நீக்க ஒரு பிரயத்தனமும்

செய்கிறதில்லையாதலால், கரிக்கனிவேலைக்காரர்கள் பொது ஜனங்களுக்குக் கரிவிலையுயர்ந்தது தெரிவிக்கவேண்டுவதில்லையென்று ஆத்திரத்துடன் மறுமொழி சொன்னான். தர்க்கமெல்லாம் முடிந்தபின் அந்த கரிக்கனி வேலைக்காரனும் சேர்ந்து தான் ஆலோசனைசெய்து அச்சேணியர்கள் கூட்டுறவு வியாபாரக்கடை ஏற்பட்டது. உலகத்தில் ராஜ்யம் ஆளுகிறவர்களாகட்டும் முதலாளிகளாகட்டும் இப்படித்தான் செய்கிறது வழக்கம். ஏதாவது ஒருகுறையைத் தீர்த்துவைக்கவேண்டுமென்று அரசாளுகிறவர்களைக்கேட்டால், "வீண்கலகப்படுத்தவேண்டாம்; இன்னும் வேளை வரவில்லை, நீங்கள் முறையிடுவதினால் உங்களுக்குக் கெடுதல்தான் உண்டாகும். பொறுத்திருந்தால் தானே உங்கள் மனோரதம் சித்திக்கும்" என்று சொல்லிவிடுகிறார்கள். இதைக் கேட்டுத்திருப்தியடைந்து சிலகாலம் பேசாமலிருந்த பிறகு அரசாளுகிறவர்கள் வாக்குக்கொடுத்தபடி நடக்காததைப்பார்த்து மறுபடியும் அவர்களைப்போய்க் கேட்டால், அதற்கு, "இப்போது ஒருவரும் இந்த விஷயத்தைப்பற்றி எங்களிடம் பிரஸ்தாபிக்கவில்லையே. ஜனங்களுக்கு நீங்கள் இருக்கிறதாக சொல்லுகிறகுறை இல்லைபோலிருக்கிறது. ஆகையால் நாங்கள் ஒன்றும் இப்பொழுது செய்யவேண்டுவதில்லை" என்று உத்தரம் கொடுத்து ஏமாற்றிவிடுகிறார்கள். இந்த மாதிரிதான் அப்போதும் ராஷ்டேலில் நடந்து சேணியர்கள் பிறர்மேல் நம்பிக்கை வைத்துத் தாங்கள் அதுவரையில் பட்டகஷ்டங்கள் போதுமென்று தங்களுக்குள்ளேயே வியாபாரச் சங்கம் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

கூட்டுறவுச் சேணியர்கள் தங்கள் சங்க விஷயத்தில் முக்கியமாகக்கவனித்த தென்னவென்றால் எல்லாவியாபாரமும் ரொக்கப்பணத்துக்கே நடக்கவேண்டுமென்பது. வாரம் ஒன்றுக்கு ஒவ்வொருவரும் இரண்டணா வீதம் சேர்த்து முதல் சம்பாதித்து வர்த்தகம் செய்பவர்களுக்கு எப்படி ரொக்க வியாபாரம் செய்ய முடியும் என்று சந்தேகிக்கக் கூடும்; ஆனால் சத்தியம் தர்மம் இவைக்குக்கட்டுப்பட்டே அவர்கள் இம்மாதிரியான நிபந்தனை செய்துகொண்டது. கடன் வியவகாரங்களினால் தான் ஜனங்கள் சீரழிவது என்பது அவர்களுடைய கொள்கை. தங்கள் சங்கத்துக்குப் பின் வருமாறு பிரயோஜனங்களை மனதில் ஏற்படுத்திக்கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

"இந்தச் சங்கம் ஏற்பட்டதின் முக்கிய காரணமென்னவென்றால், அதில் சேருகிறவர்களுடைய குடும்பஸ்திதியையும் உலக வாழ்க்கைச் சிறப்பையும் விருத்திசெய்யும் பொருட்டு ஒரு பங்கு

15 ரூபாய் வீதம் பங்குகள் சேர்த்து பின் குறிப்பிட்ட ஏற்பாடுகள் செய்யத்தான்,

"சாப்பாடு, உடுப்பு முதலியவைக்கு வேண்டிய பதார்த்தங்கள் விற்பனைசெய்ய ஒரு பண்டசாலை ஏற்படுத்தல்.

"தங்கள் கஷ்டதசையை நிவர்த்தித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள் வசிக்கும்படியான வீடுகளை கட்டியோ அல்லது கிரயத்துக்கு வாங்கியோ ஸ்தாபித்தல்.

"வேலையில் சரியான சம்பளம் கிடைக்காதவர்களுக்கும் வேலையே கிடைக்காதவர்களுக்கும் வேலை கொடுத்துப் பிழைக்கும்படி செய்ய தொழில்கள் ஏற்படுத்தல்.

"சாகுபடி செய்ய இஷ்டமுள்ளவர்களுக்கு நிலம் வாங்கிக் குத்தகைக்கு விடுதல்.

"இயந்திரமட்டில் பதார்த்தங்களை விளைவித்தல், விநியோகித்தல், ஜனங்களுக்குப் படிப்பு கற்பித்தல், அவர்களை ஆளுதல் இந்த விஷயங்களைப்பற்றி ஏற்பாடு செய்தல்."

அப்போது அவ்வூரில் ராஷ்டேலில் "தேரைச்சந்து" என்றுஒருதெரு உண்டு. அதற்கு வாய்ந்த பெயர் அதின் தோற்றத்திற்குத்தக்கபடி தான் இருந்தது. அதில் ஒரு வீட்டின்ஒரு பாகத்தை மூன்று வருஷங்களுக்கு வாடகைக்குப் பேசிவருஷம் ஒன்றுக்கு ரூ 150 ஆக வாடகையைத் தீர்த்து அதில் கோதுமைமாவு, வெண்ணெய், சர்க்கரை இம் மூன்று பதார்த்தகங்களில் அணு, அணு, வைத்துக் கொண்டு வியாபாரத்துக்கு ஆரம்பித்தார்கள். இப்போது இருக்கும் சங்கத்தார் அந்த முதல் நாளை நினைக்கும் பொழுது ஆச்சரியப்படுகிறார்கள். ஆனால் "தேரைச்சந்தில்" ஏற்படுத்தப் பட்டசங்கம் இவ்வளவு நல்லஸ்திதிக்கு வந்திருக்கிறது என்பதில் நமக்கு கொஞ்சங் கூடஆச்சரியமில்லை. ஷேக்ஸ்பியர் என்கிற ஒரு பெயர் பெற்றஆங்கிலகவி சொல்லியிருக்கிறார்: "தேரை எவ்வளவு அவலக்ஷணமாகவும் விஷமுள்ளதாகவும் இருந்தாலும், தன்தலைக்குள் ஒரு ரத்தினத்தை அடக்கிக்கொண்டிருக்கிறது." ஆகவே அந்த இடத்தில் அவர்கள் தங்கள் சங்கத்தை முதலில் ஸ்தாபித்தது சரியே. முதல் நாள் அவ்வூரில் வெகு நாளாக வர்த்தகம் செய்து கொண்டுவந்த கடைக்காரர்களால் தூண்டப்பட்டு அநேகம் சோம்பேறிகள் இச்சேணியர்கடையின் சமீபம் வந்து பரிகாசம் செய்தார்கள். ஆனால் நம்மார்க்கதர்சிகள் இதனால் அதைரியம் அடையவில்லை. முதல் கொஞ்சமானதால் பதார்த்தங்களெல்லாம் சிறுகச்சிறுகத்தான் அவர்களால் வாங்கமுடிந்தது; அதினால் நல்லவஸ்துக்களும் கிடைக்கவில்லை, மலிவாகவும் கிடைக்கவில்லை. மேலும், இச்சங்கத்தில் சேர்ந்த சிலர் வெகு நாளாய் கடனுக்கு சாமான்கள் வாங்கி

அவ்வூர் கடைக்காரருக்குக் கடன்பட்டிருந்தார்கள். ஒரு வீட்டுக்காரன் இந்த கூட்டுறவின் பிரயோஜனங்களை உணர்ந்திருந்தாலும் தன்மனைவியையும் அப்பிரயோஜனங்களை உணரும்படி செய்ய முடியவில்லை ஒவ்வொரு அங்கத்தினரும் பதார்த்தம் கொஞ்சம் மட்டமாயிருந்தாலும், கடைவிலையை விடக் கிறுக்கியாயிருந்தாலும் தன்வீட்டுக்கு வெகு தூரத்தில் கூட்டுறவு பண்டசாலை இருந்தபோதிலும் அங்கே தான் எல்லாம் வாங்குகிறதென்று விரதம் வைத்துக்கொண்டு நடத்தினால் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் வெகு பலமாகிவிடும். ஒரு ரூபாய்க்கு வாங்கும் சாமானில் அரையணா லாபத்தைக்கவனிப்பதை சரியான அளவு, நிறை. தகராரில்லாமல் வியாபாரத்தை முடித்தல் இவைகளில் உடம்புக்கும் மனதுக்கும் அதிகதிருப்தியுண்டு. சேணியர் பண்டசாலையில் கனத்தலாபம் சம்பாதிப்பது பெரிதல்ல, வியாபாரத்தில் ஸத்தியமும் நாணயமும் விருத்தியாகி ஜனங்களுடைய தர்மம் செழிக்கவேண்டுமென்பதே பெரிய பிரயோஜனம் என்பது கொள்கை. முதல் முதல் அந்தப் பண்டசாலையில் சேர்ந்தவர்கள் எல்லாரும் இந்த விஷயத்தை அறியாதவர்கள் ஆதலால் அப்போது வியாபாரம் அவ்வளவு சுறுசுறுப்பாய் நடக்கவில்லை. ஆனால் கொஞ்சப்பெயர்கள் பிடிவாதமாய் அந்தச் சாலையில் தவிர வேறே ஒரு இடத்திலும் சாமான்கள் வாங்குகிறதில்லை என்று பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். நாள் ஆக ஆக வியாபாரம் விருத்தியடைந்தது. ஆரம்பத்தில் 28 பெயர் சேர்ந்து 28 பவுண்டு முதலுடன் ஏற்படுத்தின வியாபாரத்தில் 6 வருஷங்களுக்குள் 140 அங்கத்தினர்களும், 397 பவுன் முதலும் ஆய்விட்டன.

இத்தருணத்தில் அச்சங்கம் இன்னும் மேன்மேல் விருத்தியாவதற்குச் சில இடையூறுகள் நேர்ந்தன. அனேக இடங்களில், சில விசித்திர ஜனங்கள் உண்டு, அவர்கள் பிறக்கும்பொழுது கிரகரீதி கோணலாயிருந்ததுபோலும்; அவர்கள் வாயைத்திறந்தாலே அவர்கள் பேச்சில் விரோதம், அவநம்பிக்கை, கலகம் இவைகளுடைய குறிகளைத்தவிர வேறொன்றும் காணப்படாது; எப்போதும் கடுஞ்சொற்களையே உச்சரிக்கிறவர்கள், ஆனால் இதற்காக அவர்கள் மேல் கோபித்துக்கொள்வதில் பிரயோஜனமில்லை. அவர்கள் எப்போதும் நீட்டினமுட்களையுடைய முள்ளம்பன்றிகள்; அவர்கள் மனக்கண்ணுக்கு எல்லாம் தலை கீழாகவே புலப்படும்; அவர்களுக்கு நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்

எந்த அர்த்தத்தில் நாம் சொப்பனத்தில்கூட நினைத்து உபயோகிக்கவில்லையோ அந்த அர்த்தத்தைத்தான் அவர்கள் எடுத்துக்கொள்ளுவார்கள்; மேல்பார்வைக்குமட்டும் ஒரு சங்கத்தில் சேரும்பொழுது அதை விருத்திசெய்வதற்காக என்று தோன்றும்; ஆனால் நிஜமாகவே அந்தச் சங்கத்தின் சங்கத்தினராகவே இருந்து அதைக் கண்டித்துக்கொண்டு வருவதே அவர்கள் வேலை; எப்போதும் ஒரு காரியம் சரியாய் முடியாது என்றே அபசகுனமாய் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அவர்களே அதைக்கெடுத்துவிட்டு நான் அப்போதே சொன்னேனே என்று சொல்வார்கள். இந்த தினுசு சாகுருவிகள் அந்தத் "தேரைச்சந்து" பண்டசாலையிலும் இருந்தன. ஆனால் அவர்களெல்லாம் நாள்கள் கழியக்கழிய தாங்கள் சொன்ன ஜோஸ்யமெல்லாம் பொய்யாய்ப் போய் தங்களுக்கும் அந்தச் சங்கத்தில் லாபம் கிடைக்கவே நல்லவர்களானார்கள், முதலிலிருந்தே இச்சங்கமானது தனது அங்கத்தினர்களின் மனதைத் திருத்துகிற வேலையை அங்கீகரித்துக்கொண்டது.

அவ்வூர்க் கடைக்காரர்களோடு போட்டி போடுகிற எண்ணம் அச்சங்கத்தினருக்கு இல்லாததினால், பதார்த்தங்களின் விலைகளை கடைவிலைகளைவிடக் குறைத்து விற்கிறதே இல்லை. ஒருசமயம் அந்தவூரில் இருந்த ஒரு மா அரைக்கும் இயந்திர சாலையில் தங்கள் மீதிப்பணத்தில் கொஞ்சம் போட்டிருந்த போது, அந்த இயந்திரசாலை முறியவே, நம்சேணியர் பண்டசாலையில் தங்களுக்கு லாபமாய்ச்சேர்ந்திருந்த பணங்கள் எங்கே முழுகிப்போய்விடுமோ என்று அனேகர் தங்கள் தங்கள் பணங்களை திரும்பிக்கேட்க ஆரம்பித்தார்கள். ஒருவர் இரண்டு பெயருக்குத் தடையில்லாமல் பணம் திருப்பிக்கொடுக்கப் பட்டபொழுது பாக்கிப் பெயர்களெல்லாம் நிதானித்து யோசித்துப்பார்த்ததில் தங்கள் வீட்டில் வைத்திருந்த பணங்களைக்கூட இந்தச் சங்கத்தில் போட்டுவைத்திருந்தால் கவலையில்லையென்றுதோன்றி அவர்கள் அப்படியே செய்தார்கள். இவ்விதமாய் சங்கத்தின் முதல் ஜாஸ்தியாய்க்கொண்டே வர வியாபாரமும் பலத்துக்கொண்டேவந்தது.

இந்த ஆச்சரியமான விருத்திக்குக் காரணங்கள் இரண்டே. ஏற்கனவே சொல்லப்பட்டதான ரொக்க வியாபாரம். இரண்டாவது அந்தச்சங்கத்தில் லாபம் எப்படி விபாகப்படுத்தப்பட்டதென்றால் எல்லாச் செலவுகளும்போக மீந்ததில் அவரவர்கள் போட்ட முதலுக்கு வட்டி கொடுத்து விட்டு பாக்கியை அங்கத்தினர்களுக்கு அவரவர்கள் வியா

பாரம் செய்த தொகைமேல் வீதித்து லாபம் பிரித்துக்கொடுக்கப்பட்டது. இன்னொரு விசேஷமாவது: அங்கத்தினர்களெல்லாம் இனமாய் படிக்கும்படியாக பெரிய புஸ்தகசாலை ஒன்று ஏற்படுத்தினார்கள். முடிவாய், இந்தமார்க்கதர்சிகளின் முக்கிய விசேஷங்களாவன :—

1. தாங்களே சேகரித்த பணத்திலிருந்தே ஒரு பண்டசாலை ஏற்படுத்தினார்கள்.

2. தங்களால் சம்பாதிக்கக்கூடியமட்டில் சுத்தமான பதார்த்தங்களையே விற்றுவந்தார்கள்.

3. சரியான நிறை அளவுப்படி விற்றார்கள்.

4. இதரகக்கடை விலைக்குக் குறையாமல் விற்றார்கள்.

5. கடனுக்கு வியாபாரமே செய்கிறதில்லை.

6. லாபத்தை அவரவர்கள் சரக்குகளுக்காகக் கொடுத்த தொகையின்மேல் வீதித்துக்கொடுத்தார்கள்.

7. அங்கத்தினர்களெல்லாரையும் தங்கள் லாபங்களை அந்தச் சங்கத்திலேயே முதலாய் வைக்கும்படி ஏற்பாடு செய்தார்கள்.

8. போட்டமுதலுக்குக் குறைந்த வட்டியே கொடுத்தார்கள்.

9. முதலாளிகளுக்கும் வேலையாட்களுக்கும் வித்தியாசமில்லாமல் லாபங்களைப் பிரித்தார்கள்.

10. லாபத்தில் ஒரு சிறுபாகத்தை அங்கத்தினர்களுடைய படிப்பு விஷயத்தில் செலவு செய்தார்கள்.

11. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் எல்லாக் கூட்டங்களிலும் ஒரு வோட்டுஉண்டு என்று ஏற்படுத்தினார்கள்.

12. பொருள்கள் விளைவிப்பதிலும் கைத்தொழில்களிலும் கூட்டுறவுச் சங்கக் கோட்பாடுகளையே உபயோகித்தார்கள்.

13. சாமான்களையும் சரக்குகளையும் ஏராளமாக வாங்கியோ உண்டாக்கியோ அங்கத்தினர்களுக்குக் கொடுப்பதினால் நல்ல பதார்த்தங்களை மலிவாய்க்கொடுத்தார்கள்.

14. சோம்பேறியாயிராமல் தங்கள் தங்களால் இயன்றமட்டும் வேலை செய்பவர்களுக்குச் சகல சௌகரியங்களும் கூட்டுறவினால் ஏற்படுத்தினார்கள். ஆரம்பத்தில் அதாவது 1844 ஷு த்தில் 28 பெயர்கள் அங்கத்தினர்கள் 48 ஷு த்திற்குள் 11,647 பெயர்கள் ஆய்விட்டார்கள். முதலில் 28 பவுன் முதல். 1891 ஷு த்தில் 3,70792 பவுன். 1845 ஷு த்தில் 710 பவுனுக்கு வியாபாரம் செய்தார்கள். 1891 இல் 186,025 பவுனுக்கு வியாபாரம். 1845 ஷு ல் லாபம் 22 பவுன் 1891 ஷு த்தில் 52,198 பவுன். இந்த லக்கங்களிலிருந்து ஒவ்வொருவரும் அச்சங்கம் எவ்வளவு ஆச்சரியமாய் விருத்தியாயிருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம்.

கே. எஸ். பாட்டராசாரி.

புதியகவிகள்
New Poems

இஃது இங்கிலீஷில் ஸானெட் என்னும் பாவினத்தை
ஒருவாறு பொருந்த எழுதியது.

2. காதலி

உலகுதனில் மிகுபகுதி [1] பலகுறியால் ஒரு கடவுள்பேசும்;
இலகுமுதிர் [2] எனதமதி முழுமுதலை [3] இது அதெனக்கூசும்;
சிலசிறிய, சிலபெரிய, சேர்ந்தருகு சேணிடத்துக் [4] காணும்
அலகில்பொருள் [5] அனைத்தினுமே கடவுள்நிலை அறிந்தென்மதி பேணும்;

வலிமை,அறி யாநிலைமை, அறிவின்பு, வளரன்பு, நீதி
பொலிவு, கலை, அமைவழகு, நன்மைபுக லருபெருமை ஆதி
பலஎனினும், தெய்வீகப் பண்புகளில் அன்பு தலை [6] ஆதல்,
கலைமறைகள் தவர்முனிவர் அவனைவருமே அறிந்துண்மை ஓதல்.

இவ்வுண்மை அறியாரே அழகறிவு முதல்தலை என்ப;
அவ்வண்ணம் அறியேனும் மறுகி, உளம் அலமந்து [7] பின்பு,
நின்னன்பு வெள்ளத்தில் நீந்திவினை யாடுமதி நேர்ந்து,
சின்னமதி பேர்ந்து, மருள் [8] தீர்ந்தன்பின் தெய்வீகம் தேர்ந்தேன்

ஆதலினன்றே,அன்பும் அழகும் உரு அமைந்ததன உன்பால்,
காதலி! யான் கடவுணிலை கண்டுள்ளம் களிக்கின்ற இன்பே,

அ. மா.

---

(1) பெரும்பான்மையோர்; (2) பிரகாசிக்கின்ற முதிர்ந்த (3) கடவுளை (4) நெடுந்தூரத்து (5) கணக்கிலாத சிருஷ்டிப் பொருள்கள். (6) தலைமையானது. (7) மனம் சுழன்று வருந்தி. (8) அழகு, அறிவு, முதலாயின, தெய்வீககுணங்களில் அன்பினும் (மேலானவையும்) மயக்கம்.

குறிப்புக்கள்
Notes

1. சர்க்கரை மரம்

சர்க்கரையுற்பத்தியில் இந்தியக் கரும்புக்குப் போட்டியாக பீட்கிழங்கு முதலிய பல சத்ருருக்கள் தலைப்பட்டிருப்பது போதாமல் பிரிடிஷ் கொலம்பியாவில் டக்ளஸ்-பர் என்ற ஒரு மரமும் தோன்றியிருக்கிறது. அம்மரத்தின் இலைகளில் சர்க்கரை தானாகவே உற்பத்தியாகி கால் இஞ்சுமுதல் இரண்டு இஞ்சு வரை அப்பளமாக(Crust)உறைகிறதாம். அது வெண்யாகவும் வெகு இனிப்பாகவுமிருக்கிறதாம். வாயிற்போட்டுச் சற்று நேரத்துக் கெல்லாம் கட்டியாகி உடனே கரைகிறதாம். இதிலிருந்து சர்க்கரை செய்யப்பட்டு ஏற்று மதிக்குத் தயாராய் விடுமாகில் கரும்பின் ராஜ்யமே அழிந்துவிடும் போலும்.

2. ரேடியம்

ரேடியமென்பது சமீபகாலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு தாது. இப்பொழுது அதிக உபயோகத்துக்கு வந்து விட்டது. அதன் தொழிலும் நடக்க ஆரம்பித்திருக்கிறது. அதற்காக இதுவரை 3,4 கம்பெனிகளும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. வருங்காலத்தில் இது வெகு உன்னதியடைந்து விடு மென்று நம்பப்படுகிறது.

பெரிய கம்பெனியொன்றில் இஃது ஒரு வருஷத்துக்கு ஒரு அவுன்ஸ வீதம் தயாரிக்கப்படுகிறது. இது மிகக்குறைவுபோல் தோன்றும். ஆனால் இப்பொழுது உலகமுழுவதிலும் 5 அவுன்ஸ் ரேடியமே கைவச மிருக்கிறது. ஒரு கிராம ரேடியத்தின விலை சுமார் 4,20,000 ரூ. (1 தோலா= சுமார் 11. 4 கிராம)

கடியாரங்களில் ஒளிகொடுப்பதற்காக ரேடியம் வைக்கப்படுவதை எல்லாரும் அறிந்திருப்பார்கள்.

நாளது வரை 40 லக்ஷம் கடியாரங்களுக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் ரேடியமே செலவாயிருக்கிறதென்றால் இவ்வளவு விலை பெற்ற தாதுவை அற்பவிலையுள்ள கடியாரங்களில் எப்படி வைத்து விடுகிறார்களென்று ஆச்சரியப்படத் தேவையில்லை. உண்மை என்னவென்றால் ரேடியம் தானாக ஒளி வீசுவதில்லை. அதன் அணுக்களுக்குப் பிற வஸ்துக்களை ஒளி வீசச் செய்யும் சக்தியிருக்கிறது.

சில வியாதிகளைச் சொஸ்தப் படுத்துவதிலும் ரேடியம் உதவியளிக்கிறது. இதனால் வைத்திய இலாகாவில் இதன் தேவை அதிகரித்து வருகிறது. இத்தேவைக்காக நியூயார்க்கு நகரில் நாஷனல் ரேடியம் பாங்கு என்று ஒரு பாங்கு ஸ்தாபித்திருக்கிறார்கள். அங்கு $3\frac{1}{2}$ லக்ஷம் டாலர் விலை மதிப்புள்ள ரேடியம் வைக்கப்பட்டு ஸெக்யூரிட்டி அல்லது ஈட்டின் பேரில் வட்டிக்குக் கடன் கொடுக்கப்படுகிறது.

ரேடியம் அகப்படுகிறமிகப் பெரிய சுரங்கங்கள் அமெரிக்கா ஐக்கிய நாட்டில் கொலரெடோப்பிராந்தத்திலிருக்கின்றன. அங்கிருந்து மூலப்பொருளைத்தோண்டி எடுத்து ஆறு குதிரை வண்டிகளிலேற்றி 58 மைல் தூரத்துக்காப்பால் இருப்புப் பாதையில் கொண்டுவந்து பிறகு ரயில் வழியாக ஆரெஞ்சு என்னும் நகரத்துக்குக்கொண்டு போகிறார்கள். இந்நகரில் ஒரு கார்கானா (Factory)வில் அது சுத்தி செய்யப்படுகிறது. சுத்தி செய்யும் முறை வெகுவளைவானது (Complicated) 8வண்டிப்பாரம் மூலப்பொருளைச்சுத்தி செய்தால் துளி (Pinch) ரேடியம் கிடைக்கிறது.

3. சந்திரன் மீது குண்டெறிதல்.

அமெரிக்கா ஐக்கிய நாட்டு வாஸியாகிய ப்ரொபெஸர் ஆர். எச். காடார்டு என்பவர் ஒரு காலேஜ் அத்யக்ஷர். அவர் தமது ஒய்வு நேரங்களில் சந்திரன் மீது குண்டு எறிய யுக்தி செய்து கொண்டிருக்கிறார். அவர் சொல்வதாவது :-

637 சேர் கனமுள்ள ஒரு குண்டில் பல பைகள் அமைத்து அவற்றில் குறிப்பிட்ட சில மருந்துகள் வைத்திருப்பேன். அக்குண்டை எறிந்து கொஞ்சநேரத்தில் குண்டின் வேகம் குறையும் போது ஒருபை தானகவே வெடிக்கும். அப்பொழுது குண்டை முன்னேக்கி ஓடச்செய்யும். குண்டு கொஞ்சதூரம் போய் அதன் வேகம் மறுபடியும் குறையும் போது இன்னெருபை வெடித்துக்குண்டுக்கு வேகமளிக்கும். இந்தப்பிரகாரம் பைகள் ஒன்றன் பின் ஒன்றாக வெடித்துக் குண்டை வேகமாய் ஓடச்செய்துகொண்டே போகும். 2 லக்ஷத்து 40 ஆயிரம் மைல்தூரம் போய்க் குண்டு சந்திரனைத் தாக்கும் போது அதில் வைக்கப்பட்டிருக்கிற இன்னெருமருந்து குபீர் என்று பற்றி எரியும். அதன் ஒளியை நாம் பூமியிலிருந்து பார்க்கலாம்.

இவர் சொல்வது பலிக்குமானல் அமாவாசியையன்றும் சந்திரபிம்பம் தெரியும் படியாகச் சில குண்டுகளை யெறிந்து விடலாம்.

இப்படி வெகு வேகமாய்ச் செல்லும்படியாக ஒரு பாணத்தை எய்வதும், அதன் வேகம் குறையாமல் லக்ஷக்கணக்கான மைல்கள் ஓடும்படி தானக வெடித்து வேகமளிக்கக் கூடிய சாமான்கள் அதில் அமைப்பதும் சுலபமாயிருந்தபோதிலும் பூமியும் சந்திரனும் சதா இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனவே, அதற்குத் தகுந்தபடி பாணம் தன் பாதையைத் தானகவே எங்ஙனம் நிர்ணயித்து விலகாமல் சந்திரனைப் போய்த் தாக்கும் என்பது விளங்கவில்லை.

பி. ய.

தமிழ் மொழிகள்
Tamil Terms

ஸ்ரீமான் பண்டிதர் குருஸ்வாமி தீக்ஷிதரவர்கள் எழுதியது.

Chemistry	பொருளியல்
Physics	பண்பியல்
Physiology	உடலியல்
Zoology	உயிர்ப்பொருளியல்
Geology	நிலவியல் (தரையியல்)
Geography	ஞாலவியல்
Botany	பூண்டியல்
Element	தனிப் பொருள்
Compound	கலவைப் பொருள்.

Village	ஊர்
Firka	குறு நிலம்
Taluk	நடு நிலம்
District	பெரு நிலம்
Presidency	தலை நாடு
Country	நாடு
Continent	பெருந்தரை
World	ஞாலம்

Luxury	பெருக்கு, மிகை
Fertility	வளமை
Labourer	தொழிலாளி
Capitalist	முதலாளி
Government	அரசு, ஆட்சி
Governor	ஆளுபவன், ஆளன்
Collector	இறைத் தண்டற்றலைவன்
Village Panchayat	ஊர்க்கழகம்
Taluk Board	சிறுநாட்டாண்மைக் கழகம்
District Board	பெருநாட்டாண்மைக் கழகம்
Civil Suit	பொருள்வழக்கு
Civil Court	பொருள்வழக்கிடம்
Criminal Court	இடர்வழக்கிடம்
Court	அறவகுப்பிடம்

(தொடரும்)

மதிப்புரை
Review

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.—குறள்

கூட்டுறவு முறையின் வரலாறும் அதனை வளர்க்கும் முறையும். (இது கும்பகோணம் உயர்தரக் கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீமான் டி. கே. ஹநுமந்த ராவ் அவர்கள் பி. எ. எல். டி. திருவாரூரில் நடை பெற்ற கூட்டுறவு மகாநாட்டில் செய்த உபந்நியாசத்தை, டை யூர் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராமையர் தொகுத்தெழுதியது; கும்பகோணம் கூட்டுறவுப் பண்டகசாலையின் கூட்டுறவுப் பிரசார சங்கத்தார் வெளியிட்டது. விலை அணா 2½) ஏழை நாடுகளை முன்னேறச் செய்யவல்ல கூட்டுறவு இயக்கத்தைச் சென்னை ராஜதானியில் முதல் முதல் ஸ்தாபித்தவர்களுள் ஸ்ரீமான் T. K. ஹநுமந்தராவ் அவர்கள் ஒருவர். கூட்டுறவு இயக்கம் பிறநாடுகளில் எவ்வாறு பிறந்து வளர்ந்து செழித்துவர்திருக்கிறது என்பதையும் அதனால் உண்டாகும் பயன்கள் யாவை என்பதையும் கிட்டத் தட்ட இருபதுவருஷ காலமாக அவர்கள் கவனித்து வந்திருக்கிறார்கள். ஆதலால் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசுதற்கு அவர்களே மிகவும் உரியவர்கள். அவர்கள் செய்த இந்த உபந்நியாசம் கூட்டுறவு முறையைப் பற்றிய விஷயங்களை மிகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் காட்டுகிறது. கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிய விஷயங்களை அறிய விரும்புவார் அனைவருக்கும் இப் புத்தகம் நாடிய பயன் தரத்தக்கது.

அ.